★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: சித்திரை 28உ வியாழன் (10—5—56) ★ ★ வெளியூர்: சித்திரை 29உ வெள்ளி (11—5—56) [இதழ் 2…

உலகப்பெரிய அணைகளுள் ஒ… செஞ்சீனாவில் அமைந்துவிட்ட…

2000 கோடி கன கெஜ நீரை தேக்கி வைக்கலாமா…

ஹாங்காங், மே 10—

பல வளைவுகள் கொண்ட அணைக்கட்டுகளை உலகத்தின் … உயரமானவற்றுள் ஒன்று என்று கருதப்படத்தக்க அ… ஹுவாய் நதியில் செஞ்சீனா கட்டி முடித்திருக்கிறதாம்!

(4-ம் பக்கம் பார்க்க)

ஐந்தாண்டுத் திட்ட அக்கிரமம்:

கண்டிப்போர் தொகையும் வகையும் வளர்கிறது!

‘ரூ. 4200 கோடியில் தென்னாட்டிற்கு ரூ. 100 கோடிதானா ?’

‘மூலப் பொருள் இல்லை என்ற வாதத்தை ஏற்பதற்கில்லை’

‘சென்னையில் தொழிற்சாலைகள் நிறுவ சர்க்கார் முயற்சிக்கவேண்டும்’

நகர சபைக் கூட்டத்தில் தொழில் அதிபர் அனந்த ராமகிருஷ்ண அய்யர் இடித்துரை

சென்னை, மே 9—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாட்டிற்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி குறித்து கண்டனமெழுப்புவோரின் தொகையும், வகையும் வளர்ந்தவண்ணமுள்ளன.

ஏற்கனவே, தென்னாட்டில் தொழில் வளக்குறைவை எடுத்துரைத்து, இங்கு அதிகமான தொழிற்சாலைகள் நிறுவவேண்டும்—அதற்காக சென்னை சர்க்கார் பெருமுயற்சி மேற்கொள்ள வேண்டும் என்று இடித்துரைத்து வருகிற பிரபல தொழில் அதிபரான அனந்தராமகிருஷ்ண ஐயர் இப்போது மீண்டும், நகரசபைக் கூட்டத்தில் இது குறித்துக் குரல் எழுப்பியிருக்கிறார்.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் குறித்து நகரசபையில் விவாதிக்கப்பட்டபோது அவர் பேசியதாவது:—

"நகரசபை திட்டம் குறித்து விவாதிக்கும்போது, மாநில சர்க்காரின் முதல் மந்திரியும் நிதி மந்திரியும் இங்கு அழைக்கப்பட வேண்டும். அப்போது நகரசபை உறுப்பினர்களின் கருத்துக்களை அவர்கள் தெரிந்துகொள்ள முடியும்.

"மேலும், இந்த விவாதம் நடைபெறும்போது ஒரு சில உறுப்பினர் மட்டுமே இங்கு இருக்கின்றனர்; இதுபோன்ற முக்கியமான விவாதங்கள் நடைபெறும்போது உறுப்பினர்கள் அனைவரும் இருக்க வேண்டியது அவசியம்.

"இரண்டாம் திட்டத்தில் பொதுத்துறையில் மட்டும் டில்லி சர்க்கார் 2,000 கோடி ரூபாய் செலவிடப்படவிருக்கிறார்கள். தனியார் வேறு 2,200 கோடிவரை முதலீடு செய்து தொழில்கள் துவங்கவிருக்கிறார்கள்.

"இவ்வளவு பெரிய ஏற்பாட்டில் தென்னாட்டிற்கு சுமார் 100 கோடிக்கு சற்று அதிகம் மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கிறார்.

"தொழில்கள் துவங்கத் தேவையான மூலப் பொருள்கள் இங்கு இல்லை என்று கூறப்படுவதை நான் ஏற்றுக் கொள்வதற்கில்லை.

"ஒருவருக்கு எவ்வளவு ஆற்றல் உண்டோ, அவ்வளவு தொகை பெற முடியும் என்ற நிலைதான், இரண்டாம் திட்டத்தில், குறிப்பாக பொதுத்துறையில் நிதி ஒதுக்கப்பட்டுள்ள முறையில் நிலவுகிறது.

"எனவே, நகரசபையினரும், சென்னை சர்க்காரும் தங்கள் ஆற்றலுக்கு உட்பட்ட அத்தனை முயற்சிகளையும் மேற்கொண்டு சென்னை நகரின்

(4-ம் பக்கம் பார்க்க)

தொழிலாளருக்கு 8 மாதச் சம்பளம் ‘போனஸ்’

சென்னை, மே 9—

மேட்டூர் அணை ‘மேட்டூர் இண்டஸ்டிரீஸ் லிமிடெட்’ தொழிலாளருக்கு 1954-55-ம் ஆண்டிற்கு 8 மாத அடிப்படைச் சம்பளத்திற்குச் சமமாகப் ‘போனஸ்’ வழங்குமாறு கோவை தொழில் நீதிமன்ற நீதிபதி கே. என். இராதாகிருஷ்ண (முதலியார்) தீர்ப்பளித்திருக்கிறார்.

அடிப்படைச் சம்பளத்தில் கிராக்கிப்படி தவிர்த்து மற்ற ‘அலவன்ஸ்’கள் சேர்க்கப்படுமெனத் தெரிகிறது.

வரி தராது நாமம் போட வியாபாரியின் ‘ராம’ பஜனை

கணக்குப் புத்தகங்களுக்குப் பதில் ‘இராமாயண’ புத்தகத்தை அனுப்பினாராம்!

ராஜ்கோட், மே 9—

வரி கேட்கும் சர்க்காருக்கு வரி தராமல், ஏமாற்றி ‘நாமம்’ போடுவோர்பற்றி—‘கோவிந்தா’ போடுவோர்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம்.

ஆனால் வரி கேட்கும் சர்க்காரை, ‘ராமா, ராமா, ராமா’ என்று பஜனைபாடி ஏமாற்ற நினைப்போரும் இருக்கிறார்கள் என்பதற்கு ஒரு சம்பவம் கிடைத்திருக்கிறது.

பகத் என்பவர் இங்கு ஒரு பிரபல மிட்டாய் வியாபாரி.

வருமான வரி இலாகாவினர், வருமான அளவைக் குறித்த அனுப்புமாறு அவருக்கு ‘சமூனா’க்களை அனுப்பி வைத்தனர்.

ஆனால், அந்த வியாபாரியோ, ‘சமூனா’க்களில் வருமானம்பற்றிக் கேட்கப்பட்டிருந்த கேள்விகளுக்கெல்லாம் ‘ராமா, ராமா, ராமா’ என்றே எழுதி அனுப்பி விட்டாராம்!

இதகண்ட அதிகாரிகள், உடனே அவரது வரவு—செலவுக் கணக்குப் புத்தகத்தைக் கொண்டுவருமாறு கோரினராம்.

ஆனால் அந்த தந்திரக்கார வியாபாரியோ, இராமாயணம், மகாபாரதம் போன்ற புராணப் புத்தகங்களை, கணக்குப் புத்தகங்களுக்குப் பதிலாக அனுப்பிவைத்தாராம்!

இந்த எத்தர்மீது மேலால் என்ன நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் உத்தேசித்திருக்கின்றனர் என்பது தெரியவில்லை.

வள்ளுவர் நகரில்:

மாநில மாநாடு அலுவல்கள்

வெகு துரிதம்! மிக வேகம்!!

வாரீர்! வந்து சேரீர் திருச்சிக்கு!!

(தில்லை-வில்லாளன்—நமது விசேட நிருபர்)

திருச்சி, மே 9—

திராவிடத்தின் பட்டிதொட்டிகளிலெல்லாம் திருச்சிபற்றியே பேச்சு! இயக்கக் காளையரோ, ‘நாளையே மாநாடு இருக்கக்கூடாதா’ என்ற ஆவலோடு ‘காலண்டரை’ப் பார்க்கின்றனர். அவர்களின் ஆவல் அணையுடைத்துக் கொண்டிருக்கிறது என்பது, அன்றாடம் தோழர்கள் திரள்திரளாக வந்து, முடிந்து கொண்டிருக்கும் பந்தலையும், மும்மரமாக வேலை செய்து கொண்டிருக்கும் தற்காலிகத் தலைமை நிலையத்தையும் பார்த்து விட்டுச் செல்வதிலிருந்து தெரிகிறது.

மாலை நேரமானால், வரும் தோழர்களின் கூட்டத்தைச் சமாளித்துக் கொண்டு பந்தல் வேலையையும், மற்ற வேலைகளையும் செய்ய வேண்டியிருக்கிறது. அவர்களின் ஆர்வத்தை அளக்கும் அளவுகோல் இதுவேயாகும்.

மாநாட்டு அலுவலாளர்கள், வரவேற்புக்குழுத் தலைவர் அன்பில்—தர்மலிங்கம், மணி, பராங்குசம், ஷரீப், ராபி; முத்துகிருஷ்ணன் போன்றோரைத் தேடினும் கிடைக்கவில்லை. ஆளுக்கொரு அலுவலாகப் பறந்து கொண்டிருக்கின்றனர். நாட்கள் நெருங்க நெருங்க, அவர்கள், நிற்கவும்

(4-ம் பக்கம் பார்க்க)

அரிசி வியாபாரிகளுக்கு எச்சரிக்கை!

கர்னூல், மே 9—

"இவ்வாண்டு சர்க்கார் வெளி ‘மார்க்கெட்’டிலிருந்து அரிசி வாங்குவார்களென்று எதிர்பார்த்த வியாபாரிகள் அரிசியை முடக்கினால் ஏமாற்றமடைவது உறுதி. இத்தினங்களின் விலைவாசிகளைக் கவனித்து, தகுந்த வழிக்கு அவர்கள் வராவிடில், எல்லா முக்கிய நகரங்களிலும் இந்தியப் போரசினரைக் கொண்டு நியாயவிலைக் கடைகளைத் திறக்கச் செய்வோம்," என்று, ஆந்திர உணவு விவசாய அமைச்சர் எச்சரித்துள்ளார் எனத் தெரிகிறது.

புதுடில்லி, மே 9—

"திரைக்கதை, வசனக் கட்டத்திலேயே இந்திய படச்சுருள் (‘பிலிம்’) தணிக்கை செய்யும் எண்ணம் அரசியலாருக்கில்லை. சுயமாக அனுப்பின வசனங்களை தணிக்கை செய்யும் விதம் பரிசீலனையில் இருக்கிறது" என்று, மக்கள் சபையில் செய்தி, ஒலிபரப்பு அமைச்சர் டாக்டர் பி. வி. கேஸ்கர் தெரிவித்திருக்கிறார்.

எத்தர்கள் பொய்ச் செய்தி

ஈ. வெ. கி. சம்பத் அறிக்கை

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து விலகிவிட்டதாக தி. க. வார இதழ் ஒன்றில் வந்துள்ள பொய்ச்செய்தியை மறுத்து நண்பர் சம்பத் பின்கண்ட அறிக்கையைத் தந்துள்ளார்:—

"மாநில மாநாட்டு அலுவல்களில் ஈடுபட்டு இருக்கும் இந்த நேரத்தில், சில ஊர்களிலிருந்து நமது தோழர்கள் ‘டெலிபோனி’ல் கவலையோடு ஒரு செய்தி பற்றி விசாரிக்கத் தொடங்கியுள்ளார்கள்.

"ஏதோ ஒரு பத்திரிகையில் தி. மு. கழகத்திலிருந்து நான் ‘ராஜினாமா’ செய்துவிட்டதாக நானே கடிதமெழுதி, அந்தப் பத்திரிகை ஆசிரியருக்குத் தெரிவித்திருப்பதுபோல் பிரசுரிக்கப்பட்டிருப்பது குறித்தே நமது தோழர்களில் சிலர் இத்தனை பரபரப்புக்கு உள்ளாகி விட்டிருக்கின்றனர்.

"பத்திரிகையின்மீது வந்த கோபத்தைவிட விசாரித்த தோழர்கள்மீதுதான் எனக்கு வருத்தம் உண்டாயிற்று; ஏனெனில், திராவிடர் கழகப் பத்திரிகைகளே பொதுவாகப் பிறர் மீது பழி சுமத்துவதில் பொறுப்புணர்ச்சியையோ, கண்ணியத்தையோ கடைபிடிப்பதில்லை என்பது நாடறிந்த உண்மையாகும். அதிலும், அந்தக் கோஷ்டியிலேயே மிக மட்டரகமான ‘கழிசடை’ வாரப் பத்திரிகையின செய்தி கண்டு, நம் தோழர்களில் சிலர் பரபரப்பு அடைகின்றனர் என்னும்போது, வருத்தம் மேலிடாமல் என்ன செய்யும்?

"அந்த வாரப் பத்திரிகையில் வந்த செய்தி முழுக்க முழுக்கப் போக்கிரித்தனமான பொய்ச் செய்தி என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்வதுடன், சம்பந்தப்பட்ட பத்திரிகை ஆசிரியருக்கும் செய்தி பொய்யானது என்பதை உடனடியாகப் பிரசுரிக்குமாறு பணித்து அறிவித்திருக்கிறேன என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்."

அன்பன்
ஈ. வெ. கி. சம்பத்

மே 13-கழகக் கொடியை புதுப்பிப்பீர்! புதுக்கொடி ஏற்றுவீர்!

...நாடு

...மாலைத் தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

...லை 10—5—'56 வியாழன்

...சேதுபதியின் சிதைந்த நாதம்!

...இருமொழி—பன்மொழி ...ப்பில் இணைகின்ற மாகா...ங்களின் தனித்தன்மை அழிக்கப்பட்டு, ஒருமைப்பாட்டைக் காண்பதுதான், அத்தகு மாகாண அமைப்பின் உள்ளடக்கமாகும். அத்தகைய கலப்புக்குமுதற்கண் ஒப்புக்கொண்ட வங்காள முதலமைச்சர், சில நாள் கழித்ததும், வங்காளத்தின் தனித்தன்மைக்குக் கேடு நேராத வகையில், வங்க—பீகார் கூட்டு அமைய வேண்டும் எனப் பேசத் தொடங்கிவிட்டார். அதற்கான வகையில் இப்பொழுதுள்ளபடியே தனித்தனி ஆட்சி அமைப்புகளும் செயல்பட்டு வருவதுடன், இரண்டு மாகாணமும் இணைந்து கூட்டாக செயல்பட ஒரு கூட்டாட்சி அமைப்புக்கும் திட்டந்தர வங்க முதலமைச்சர் முன் வந்துவிட்டார்.

தான் ஒரு வங்காளி—தான் ஒரு பீகாரி என நினைத்துக் கொள்ளுவதற்கும், அதனடியாக ஒருவருக்கொருவர் பகை பாராட்டிக் கொள்ளுவதற்கும் வெளிப்படையாகத் தெரிகின்ற வங்க—பீகார் என்ற இரு மாகாண அமைப்புகளை ஒழித்து விட்டு, அதற்குப் பதிலாக இரண்டையும் இணைந்து ஒரு மாகாண அமைப்பாக ஏற்படுத்திவிட்டால் அப்பிரிவினை மனோபாவம் தொலைந்து, இந்தியன் என்ற பொதுமை உணர்வு கால்கொள்ளும் என்பததான், இருமொழிக்கூட்டு ஏற்பாட்டுக் கோரிக்கையின் மூலநோக்கமாகும். ஆனால் அந்த மூல நோக்கத்தை ஒப்புக்கொண்டதாகவோ, அல்லது அதை வெற்றிபெறச் செய்வதாகவோ வங்க முதலமைச்சரின் உள்ளக்கிடக்கை அமைந்திருக்கவில்லை. எனவே, அம்மூல நோக்கத்தை ஒத்து கொள்ளுவதாக, அவருடைய வங்க—பீகார் இணைப்பு முயற்சியும் இருக்கவில்லை.

மாகாணப்பற்றுகளை ஒழித்து ஒரே ஒரு இந்தியப்பற்றை உருவாக்க வேண்டுமென்பது இந்தியப் பிரதமர் நேரு பெருமானின் பேரவா. அது சாத்தியப்படுமா இல்லையா என்பது வேறு விஷயம். ஆனால் அதைக் காண இந்தியப் பிரதமர் ஆசை கொள்ளுகிறார் என்பது மட்டும் உண்மையாகும்.

மாகாணப் பற்றைக் கருவறுத்து, அதற்குப் பதிலாக இந்தியப் பற்றை உருவாக்குவதற்கு, பன்மொழி மாகாண அமைப்புக் கருத்து சிறந்த பலனளிக்கும் என்பது இந்தியப் பிரதமர் நம்பிக்கை. ஆனால் இணைப்புப் பற்றி பேசிடவும், முயற்சிக்கவும் முன்வரும் அவரது சீடகோடிகளோ, இணைப்பின் அடிப்படை தங்களுக்குத் தெரிந்திருந்தாலும் தெரியாமல் இருந்தாலும், இணைப்பின் அடிப்படைக்கே ஊறு தேடும் வகையில் செயல்பட்டு வருகிறார்கள்.

பன்மொழி அமைப்பு ஏற்பாட்டை உருவாக்கி விடுவதினுல் மட்டும், மொழிப் பற்று, மாகாணப் பற்று போன்ற வன்மை மிகுந்தப் பற்றுகளை ஒழித்துவிட்டு, உறுதியற்ற இந்தியப் பற்றை வேர்விடச் செய்துவிட முடியுமா என்பது சிந்திக்கத் தக்கது. ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்தால், என்றும் சாத்தியமற்ற ஒன்றை நேரு பெருமான் சாதிக்கப் பார்க்கிறார் என்ற உண்மையை ஒருவர் உணர்ந்து கொள்ளலாம்.

இங்கு தட்சிணப் பிரதேசம் பற்றி பேசுகிறவர்களோ, தமிழ் நாட்டின் வளத்தைக் கூட்டுவதற்காக திரு—கொச்சியை சுரண்டவேண்டும் எனப் பொருள்படும் வகையிலேயே பேசி வருகிறார்கள். மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி திரு—கொச்சி வழியாக பெருக்கெடுத்துச் செல்லும் நீர்த்துறைகளை, இணைப்பின் மூலம் தமிழ்நாட்டுக்குப் பயன்படுத்துவது சாத்தியமாகும் என, தமிழ்நாட்டு மக்களுக்கு ஆசையூட்ட முன்வந்துள்ளனர். மதுரையின் பாசனத்திற்கு எவ்வாறு பெரியாற்று நீரைப் பயன்படுத்த முடிந்தது, அந்த நீரை மின்சார உற்பத்திக்குப் பயன்படுத்தக்கூடாது என்று இருந்துவந்தத் தடையை எவ்வாறு ஒழிக்க முடிந்தது—என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்த்து இணைப்பை வலியுறுத்துபவர்களாகக் காணோம். பெரியாற்று நீரைக் கூடுதலாகப் பெறுவதற்கும், மின்சார உற்பத்திக்கு இணங்கச் செய்வதற்கும், திரு-கொச்சியும்-சென்னையும் இணைய வேண்டிய அவசியமில்லாதிருந்தபொழுது, மற்ற ஆற்றுத் துறைகளைப் பயன்படுத்துவதற்கு மட்டும் அந்த இணைப்பு எதற்கு எனக் கேள்வி எழுமே என்பதைக் குறித்து இணைப்பாதரவாளர்கள் சிந்தித்ததாகக் கூடத் தெரியவில்லை.

இதுவரை தமிழ் நாட்டில் இணைப்புக்கு ஆதரவாக ஒரே ஒரு அமைச்சர், அதிலும் ஆச்சாரியாரின் திருவடி வருடியாக உள்ள நிதிஅமைச்சர் மட்டுமே பேசிவந்தார். இப்பொழுது மராமத்து அமைச்சராக இருந்துவரும் இராமநாதபுரம் இராஜாவும், இணைப்புக்கு ஆதரவாகவும் பேசக் கிளம்பி இருக்கிறார். எந்தத் தேவியின் திருவருளால், இந்தப் 'பெரு நோக்கு' இராமநாதபுரம் இராஜாவிற்கு ஏற்பட்டதோ நாம் அறியோம்!

தட்சிணப் பிரதேசத்தை அமைத்துவிட்டுதான் உயிர் தரிப்பது என்ற முடிவுகட்டி இருக்கும் நிதிஅமைச்சர்சுப்பிரமணியத்தையும், வெட்கித் தலை குனியச் செய்யும் வகையில், இராஜேசுவரசேதுபதி 'சிங்கநாதம்' செய்து வருகிறார். அதாவது தட்சிணப்பிரதேச அமைப்புக்கு சென்னை உடன்படுமானால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மேலும் நூறு கோடி ரூபாய் தந்துதவுவதாக இந்தியப்பேரரசு கூறினதாக மராமத்து அமைச்சர் சேதுபதி, மதுரை கூட்டமொன்றில் வெளியிட்டு இருக்கிறார். அவருடைய இந்தக் கூற்று பற்பலவிதமான ஐயங்களுக்கு உறைவிடமாகிறது.

தட்சிணப் பிரதேசத்தை ஏற்றுக்கொள்வதாக இருந்தால் நூறு கோடி ரூபாய் இரண்டாந் திட்டத்திற்காகத் தந்து உதவுவதாக, இந்தியப் பேரரசின் சார்பில் கூறின பெருந்தகை யார்? அப்பெருந்தகை, அவ்வாறு எவரிடம் கூறினர்? இராமநாதபுரம் இராஜாவிடமா? நிதிஅமைச்சரிடமா? அல்ல சென்னை முதலமைச்சரிடமா? அவ்வாறு கூறப்பட்டதற்கு, அதைக் கேட்டுக் கொண்டவர்கள் என்ன பதில் கூறினர்கள்? இவ்வளவிற்கும் திட்டவட்டமாக பதிலளிக்க வேண்டிய கட்டாயம் இராமநாதபுரம் இராஜாவிற்கு உண்டு.

இந்த நூறு கோடி ரூபாய் இலஞ்சக் கதையை, இராமநாதபுரம் இராஜாவோ அல்லது நிதிஅமைச்சரோ, இதுவரை வெளியிடாததற்குக் காரணம் என்ன? மாகாண சீர்திருத்த மசோதா சட்டசபையில் விவாதிக்கப்பட்ட பொழுது இந்த நூறு கோடி இலஞ்சத்தைக் குறித்து இந்த அமைச்சர்கள் குறிப்பிடாது இருந்தது ஏன்?

நூறுகோடி ரூபாய் இலஞ்சத் தகவலை இராமநாதபுரம இராஜா அறிந்திருக்கும் பொழுது, நிதி அமைச்சர் அறியாது இருக்க நியாயமில்லை. அறிந்த அவர், தமது வாயால் இந்த உண்மையைக் கூறுது இருக்கும் நிலையில், இராமநாதபுரம் இராஜா கூற முன்வந்தது ஏன்?

ஒருவேளை நூறு கோடி இலஞ்சம் தருவதாக இந்தியப் பேரரசின் சார்பில் எவரும சொல்லாதிருந்து, இங்குள்ள தட்சிணப் பிரதேச ஆதரவாளர்கள் தாங்களாகவே கற்பனை செய்து கூறுவதாக இருந்தால், இந்தியப் பேரரசின் சார்பில் கேள்வி பிறக்குமபோது, இராமநாதபுரம் இராஜாவை பலிகொடுத்துவிட்டு, தாங்கள் தப்பித்துக் கொள்ளலாம் என்ற சூதுமதியின் விளைவாக இருநதாலும் இருக்கக்கூடும். உண்மை எதுவாக இருந்தாலும், இராமநாதபுரம் இராஜா குறிப்பிட்ட நூறு கோடி ரூபாய் இலஞ்சக் கதையின் இரகசியமபற்றிய முழுவிவரத்தையும், மக்களுக்கு அறிவிக்க வேண்டிய பொறுப்பு இந்தியப் பேரரசுக்கு இருக்கிறது. உண்மையை உணர்த்துமாறு இந்தியப் பேரரசை வற்புறுத்த வேண்டிய கடமை, நமது தேசிய ஏடுகளுக்கும் உண்டு. அந்தக் கடமையை, நிர்வாக நேர்மையைக் கருதி, நிறைவேற்ற முன்வருமபடி, தேசிய ஏடுகளைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இதுபற்றி, தேசிய ஏடான 'நவ இந்தியா' கோரிக்கையை நாம் ஆதரிக்கிறோம். மற்ற ஏடுகளை, அதைப் பின்பற்றக் கோருகிறோம்.

"தட்சிண ராஜ்ய யோசனைக்கு சென்னை சம்மதித்திருந்தால் மத்திய சர்க்காரிடமிருந்து மேற்கொண்டு நூறு கோடி ரூபாய் கிடைத்திருக்குமென்று சென்னை மந்திரி ஒருவர் அங்கலாய்க்கிறார். இது என்ன லஞ்சமா என்று கேட்கிறோம். ராஜ்ய இணைப்புக்கு சமமதித்தால் கொடுக்கக்கூடிய நூறு கோடி ரூபாயை அவர்கள் இணைப்புக்கு சம்மதிக்காததால் மட்டும் ஏன் கொடுக்க மறுக்க வேண்டும்? உண்மையில் இக்கூற்று மத்திய சர்க்காரின் நேர்மைக்கே களங்கம் விளைவிப்பதாக இருக்கிறது. இது விஷயத்தில் மத்திய சர்க்கார் சரியான விளக்கம் தரக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

"இணைப்புக்கு ஒப்புக் கொண்டால் அவர்கள் இங்கு என்னென்ன புதுத் திட்டங்களை மேற்கொள்ள விருந்தார்கள்? இணைப்புக்கு ஒபபுக்கொள்ளாததால் அவை எவ்வாறு பாதிக்கப்படுகின்றன? சென்னையிலும், கேரளத்திலும் அவற்றை ஏன் தனித்தனியாக ஆரம்பிக்கக்கூடாது? அல்லது இருதரப்பினரும் கூட்டு நடவடிக்கை எடுக்கக்கூடியதாயிருந்தால் அதற்கும் அவர்கள் ஏன் உதவி புரியக் கூடாது?

"இந்தக் கேள்விகளுக்கெல்லாம் மத்திய சர்க்கார் தகுந்த சமாதானம் தெரிவிக்க வேண்டும். பொது ஜன நல்லெண்ணத்தை முன்னிட்டு அவர்கள் தமது கொள்கை நிலையைத் தெளிவு படுத்துவார்கள் என்றே நம்புகிறோம்."

—'நவ இந்தியா': 6–5–56

'மனு வாழ்ந்த காலம் வேறு'

'அக்காலச் சட்டங்கள் இன்று பயனற்றவை'

'ஆணுடன் பெண்ணையும் சமமாகக் கருத வேண்டிய காலம் கனிந்துவிட்டது'

'தீர்வு காணவேண்டிய பிரச்னைகளை அலட்சியப்படுத்த முடியாது'

வாரிசு உரிமை மசோதா எதிர்ப்பாளர்களுக்கு படாஸ்கர் பதில்

புதுடில்லி—

இந்து வாரிசு உரிமை மசோதா, மக்கள்சபையில் விவாதிக்கப்பட்டபோது, சட்ட மந்திரி எச். வி. படாஸ்கர், விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசியபோது குறிப்பிட்டவையின் சாரமாவது:—

"சீதையின் குண நலன்கள் எல்லாம் பெற்று விளங்கும் இன்றைய பெண் ஒருவர், தன் தகப்பனுரின் சொத்தில் ஒரு பகுதியைப் பெறுவதினுலேயே எப்படி கீழ்த்தரமான செய்கைகளை மேற்கொண்டு விடுவார் என்பது எனக்குப் புரியவில்லை.

"இந்து விதவைக்கு சொத்து மீது உரிமை வேண்டும் என்று 1937-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட தேஷ்முக் சட்டத்திற்கு, அன்று என்ன என்ன வகையில் எதிர் வாதங்கள் கூறப்பட்டனவோ அவற்றையேதான் இந்த வாரிசு உரிமைச் சட்டத்திற்கு எதிராகவும் கூறுகிறார்கள்.

"தேஷ்முக் சட்டத்தினுல், விதவைகளின் நிலை உயர்ந்திருப்பதாக உணருகிறீர்களா இல்லையா என்பதை, ஒவ்வொரு உறுப்பினரும் நெஞ்சத்தைத் தொட்டுப் பார்த்துச் சொல்லட்டும்.

"கடந்த சில நூற்றாண்டுகளாக பெண்களின் நிலை சமுதாயத்தில் மிகவும் தாழ்வானதாக இருக்கிறது என்பதை சில உறுப்பினர்கள் ஒப்ப மறுக்கக்கூடும்.

"சௌராஷ்டிரத்தில், சமீப காலமாகக்கூட, பெண்களிடை தற்கொலைச் சம்பவங்கள் மலிந்து வருவதை நீங்கள் அறிந்திருக்கலாம்.

"சௌராஷ்டிர மாநில சர்க்கார் இந்த நிலையை ஆராய்ந்து, இது மாற வழிவகை கூறுமாறு குழு ஒன்றை நியமிக்க வேண்டியிருந்தது

"கடந்த மார்ச் 20-ந் தேதி வெளிவந்த அந்தக் குழுவின் அறிக்கைப்படி 110 தற்கொலைச் சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்தப்பட்டதாயும், தற்கொலை செய்து கொண்ட பெண்களின் உள்ளமும் உடலும் துன்புறுத்தப்பட்டதின் விளைவாகவே, இந்த உயிரை மாய்த்துக்கொள்ளும் வேலையில் ஈடுபட்டதாகவும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

"இந்தப் பெண்கள் எல்லாம் கல்வி அறிவே அற்றவர்கள்; அல்லது சிறிது கல்வி அறிவு மட்டும் பெற்றவர்கள். இவர்கள் ஒன்றும் நவீன காலப் பெண்கள் அல்ல. பின்தங்கிய பழங்காலப் பெண்கள் தான்.

"குழுவினர், இந்த அவலநிலை மாற, பெண்களுக்கு, சமுதாய—பொருளாதார விடுதலை பெற்றுத் தருவது அவசியம் என்று சிபாரிசு செய்திருக்கின்றனர்.

"எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும், அவர்கள், சர்க்காரின் வாரிசு உரிமை மசோதா குறித்து விருப்பு வெறுப்பு இன்றி பரிசீலனை செய்ய வேண்டுமெனக் கோருகிறேன்.

"இந்த மசோதா, சுதந்திர இந்தியாவில் ஆண்களும்—பெண்களும் சம அந்தஸ்துடன் உலவுவதற்கு வழி செய்கிறது. சௌராஷ்டிரத்தில் ஏற்பட்டிருப்பது போன்ற கொடுமை, நாடு முழுதும் பரவாது தடுக்கவும், அரசியல் சட்டத்தில் நாம் நிர்ணயித்திருக்கிற இலட்சியத்தை அடையவும் இந்த மசோதா வழி செய்கிறது.

"மனுவும் இதர மாமுனிவர்களும், அப்போதிருந்த சூழ்நிலைகளுக்கு ஒப்ப சட்டங்களை அமைத்திருக்கிறார்கள்; ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது. இப்போது பெண்களும், ஆண்களோடு சரிநிகர் சமானமாகக் கருதப்பட வேண்டிய காலம் வந்துவிட்டது.

"நான் புருஷோத்தமதாஸ் தாண்டன் அவர்களுக்குக் கூற விரும்புகிறேன்—நமது வளமான தொன்மையை நானும் மதிப்பவன் தான்; ஆனால், பரிகாரம் தேட வேண்டிய பிரச்சினைகள் நம் கண் முன் உறுத்திக்கொண்டிருக்கும் போது அவற்றை அலட்சியப் படுத்திவிடுவதற்கில்லை."

வனஸ்பதியில் கேடு ஏதும் இல்லையாம்!

புதுடில்லி, மே 8—

வனஸ்பதி பொது சுகாதாரத்திற்கு கேடு பயக்கக் கூடியதல்ல என்று சர்க்காருக்குத் திட்டவட்டமான தகவல் கிடைத்திருப்பதாக மாநிலங்கள் சபையில் கேள்வி நேரத்தின்போது விவசாய மந்திரி பஞ்சாப் ராவ் தேஷ்முக் தெரிவித்திருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழக

இரண்டாவது மாநில மாநாடு

திருச்சிராப்பள்ளி

★

திருச்சி இரயில்வே நிலையத்திற்கு அருகிலுள்ள பந்தயத் திடலில் அமைந்துள்ள

'வள்ளுவர் நகரில்'

1956 மே 17, 18, 19, 20-ம் நாட்களில்

நடைபெறும்

தலைவர் : **இரா. நெடுஞ்செழியன்**

துவக்குபவர்: **ஜி. பி. சோமசுந்தரம்**

கண்காட்சித் திறப்பாளர் : **என். வி. நடராசன்**

கருத்துரை வழங்குதல்: **தி. மு. கழகச் சொற்பொழிவாளர்கள்**

நாதசுர இசை : திருவாவடுதுறை **இராசரத்தினம்**

வில்லுப்பாட்டு : **என். எஸ். கிருஷ்ணன்**

இன்னிசை : **கே. ஆர். இராமசாமி, அனிபா, கஸ்தூரி, செல்வா**

நாடகங்கள் : **எம். ஜி. ஆர். குழுவினர்**
எஸ். எஸ். ஆர். குழுவினர்

தி. மு. க. விருது பெறுபவர் :மூவலூர் **இராமாமிர்தத்தம்மையார்**

நிகழ்ச்சி நிரல் :

17—5—56 வியாழன் :

காலை 9-00—ஊர்வலம் துவக்கம் [திருச்சி சிந்தாமணியிலிருந்து 'வள்ளுவர் நகரு'க்கு]

பகல் 1-00 — கொடியேற்று விழா : மாநாட்டுத் தலைவர்.

,, 1-30 } மாலை 4-00 } — இடைவேளை

,, 4-00—'புத்தர் வரலாறு' —வில்லுப் பாட்டு : கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்.

,, 5-00 — கண்காட்சித் திறப்பு விழா : துணைப் பொதுச்செயலாளர் தோழர் என்.வி. நடராசன்

,, 5-30 — இன்னிசை அரங்கு : நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி

,, 6-30 — நாதசுர இசை அரங்கு : இசைப் பெரும் புலவர் திருவாவடுதுறை இராசரத்தினம்.

இரவு 8-00—விருது வழங்குதல் : மூவலூர் மூதாட்டியார் இராமாமிர்தத்தம்மையார் அவர்களுக்கு; அறிஞர் அண்ணா பாராட்டுரை.

,, 8-30 } 10-00 } —இடைவேளை

,, 10-00—'புது வெள்ளம்' நாடகம் : இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினர்.

18—5—56 வெள்ளி :

காலை 7-30 } ,, 8-30 } — பிரதிநிதிகள் கூட்டம்

,, 9-00—இன்னிசைஅரங்கு இசைமுரசு அனீபா.

,, 10-00— ,, இசைச்செல்வி ஜி.கஸ்தூரி

,, 11-00 — துவக்கவுரை : தோழர் ஜி. பி. சோமசுந்தரம்.

,, 12-00 — வரவேற்புரை : தோழர் அ. பெ. தருமலிங்கம்.

பகல் 1-00 } மாலை 3-30 } — இடைவேளை

,, 3-30— இன்னிசை அரங்கு : இசைக் குயில் பி. எஸ் செல்வா.

,, 4-30—தலைவரை முன்மொழிதல்.

,, 4-45— ,, வழிமொழிதல்

,, 6-00 — தலைவர் முன்னுரை : இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.,

இரவு 8-00 } ,, 10-00 } - இடைவேளை

,, 10-00—'மணி மகுடம்' நாடகம் : இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினர்.

19—5—56 சனி—காலை 9 மணி :

சிறப்புச் சொற்பொழிவுகள் :

1. 'விடுதலைக் கிளர்ச்சிகள்' —கே. ஏ. மதியழகன் பி. ஏ.
2. 'தொழிலியல் புரட்சி' —காஞ்சி-கல்யாணசுந்தரம்
3. 'உரிமைக் கிளர்ச்சிகள்' —அருண்மொழி பி. ஓ. எல்.
4. 'ஜனநாயகம்' —கி. மனோகரன் பி. ஏ. (ஆனர்ஸ்)
5. 'கல்வித் திட்டம்' —வி. ஜி. இராசையா பி. ஏ. எல். டி.
6. 'நாட்டுப் பணியில் மாணவர் பங்கு' —தில்லை-வில்லாளன்
7. 'தமிழ் இலக்கியத்தில் அரசியல் கருத்துக்கள்' —க. அன்பழகன்
8. 'தனி நாடு அமைப்பும் பொருளாதார வசதிகளும்' —என். எஸ். இளங்கோ
9. 'திராவிடத்தின் உலகத் தொடர்புகள்' —மு. கருணாநிதி

நண்பகல் 1-30—மாலை 3-30 இடைவேளை

10. 'தாய்க்குல வரலாறு'—சத்தியவாணிமுத்து
11. 'மொழிப் பிரச்சினைகள்' — கண்ணதாசன்
12. 'கலையில் கருத்துப் புரட்சி'—சி. பி. சிற்றரசு
13. 'தத்துவ வரலாறு' — டி. கே. சீனிவாசன்
14. 'புத்தர் நெறி' — ஏ. வி. பி. ஆசைத்தம்பி
15. 'உலகைத் திருத்திய உத்தமர்கள்' —அரங்கண்ணல்
16. 'உலக அமைதி' — ப. உ. சண்முகம்
17. 'மறைந்த இயக்க மாவீரர்கள்' —என். வி. நடராசன்
18. 'இந்திய அரசியலில் கொள்கைக் குழப்பங்கள்' —ஈ. வெ. கி. சம்பத்

இரவு 8-30—10-00 இடைவேளை

,, 10-00 'அட்வகேட் அமரன்' நாடகம் —எம்.ஜி. இராமச்சந்திரன் குழுவினர்

20—5—56 ஞாயிறு :

காலை 7-30 } ,, 8-30 } —பிரதிநிதிகள் கூட்டம்

,, 9-00—தீர்மானங்கள் நிறைவேற்றல்

பகல் 1-30 | மாலை 3-30 | - இடைவேளை

,, 3-30—தீர்மானங்கள் நிறைவேற்றல்

,, 6-00—அறிஞர் அண்ணா சிறப்புரை

இரவு 7-30 -தலைவர் முடிவுரை

,, 8-00—நன்றியுரை

,, 8-30 | ,, 10-00 | - இடைவேளை

,, 10-00— 'சுமை தாங்கி' நாடகம் : புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினர்

★

நுழைவுக் கட்டணங்களின் விபரம்

நான்கு நாட்களுக்கும் சேர்த்து :

		ஆண்	பெண்
1-ம் பிரிவு	ரூ.	10—0—0	10—0—0
2-ம் பிரிவு	,,	5—0—0	2—8—0
3-ம் பிரிவு	,,	3—0—0	1—8—0

தனித்தனி ஒவ்வொரு நாளும் :

		ஆண்	பெண்
1-ம் பிரிவு	ரூ.	3—0—0	3—0—0
2-ம் பிரிவு	,,	1—8—0	0-12—0
3-ம் பிரிவு	,,	1—0—0	0—8—0

தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிக் கட்டணம் (நுழைவு உட்பட) : ரூ. 5—0—0

பொதுக்குழு உறுப்பினரல்லாத பிற வரவேற்புக்குழு உறுப்பினர்கட்டணம்: ,, 25—0—0

5 வயதுக்கு மேற்பட்டோர் நுழைவுச் சீட்டு பெறவேண்டும்

குறிப்பு: பொதுத்தேர்தல் குறித்துத் தி. மு. கழகத்தின் முடிவு எதுவாக இருக்க வேண்டும் என்பது பற்றி, மாநாட்டிற்கு வருகைதருவோரின் கருத்து,வாக்குரிமைச் சீட்டுமூலம் 19—5—56 காலை 6-மணியிலிருந்து மாலை 6-மணிக்குள் அறியப்படும்.

எம். எஸ். மணி, எஸ். முத்து—செயலாளர்கள்

அ. பெ. தருமலிங்கம்—வரவேற்புக்குழுத் தலைவர்

...முன்னேறுவதற்கு சமூகப் புரட்சி வேண்டும்'

...ந்தனையில் மாற்றம் வேண்டும்'

...000 ஆண்டுகளுக்குமுன் ...வாழ்வோர்போல் பேசக்கூடாது'

...மை வெறியருக்கு நேரு இடித்துரை

"சமுதாயப் புரட்சியை ஏற்படுத்துவதினுல் மட்டுமே இந்தியா முன்னேற்றமடைவது சாத்தியமாகும்.

"இவ்வாரிசு உரிமை மசோதாவை ஒரு சிறந்த இலட்சியமாகக் கருதாதவர் பலர் இருக்க முடியாது. இந்த மசோதாவின் உள்ளடக்கக் கருத்தையே நான் பெரிதும் கருதுகிறேன்; அதுவே முக்கியத்துவம் மிகுந்தது என எண்ணுகிறேன்.

"நாம் கடந்த சில ஆண்டுகளில் பல சட்டங்களை இயற்றி இருக்கிறேம்; பெண்கள் உரிமை பற்றிய கண்ணேட்டத்திலிருந்து, குறிப்பிட்ட இம்மசோதா, நாம் நிறைவேற்றிய மற்ற எல்லாவற்றையும்விட முதன்மையானது என நான் கொள்ளுகிறேன்.

"இம்மசோதாவைத் தீவிர புரட்சிகரமானது என நான் கொள்ளவில்லை; ஏனெனில், அது அத்தன்மையுடையதாக இருக்கவில்லை; அது, எதையும் மிகைபடக் கவிழ்த்து விடுவதாக இல்லை. சிறிய அளவில், விஷயங்களை அது மாற்றக் கூடும். ஆனுல், உண்மை என்னவென்ருல், சமூக நடத்தையில் நாம் பெற்றுள்ள துருப்பிடித்துப் போன சிந்தனையிலும் செயலிலுமிருந்து, இம்மசோதா நம்மை வெளியேற்றுவதானது, உயர்ந்த சிறப்புடையதாகும்.

"வழங்கும் மொழியிலும், அரசியல் அமைப்பிலும், பாராளுமன்ற முறையிலும் பிரிட்டிஷ் நடைமுறைகளைப் பின்பற்றுவது ஆச்சரியமானதாகத் தோன்றியபோதிலும், அரசியல் துறையில் இந்தியா தனது பழைமைப் பிடிப்பிலிருந்து விடுபட்டிருக்கிறது. பொருளியல் புரட்சி எனக் கொள்ளத்தகும் நடைமுறையில் நாம் ஈடுபட்டிருக்கிறேம். இப்பொழுதுதான் முதல்முதலாக நாம் சமுதாயத்துறையில் தலையிட்டிருக்கிறேம்.

'அறத் துறையிலும் கை வைத்திருக்கிறேம்' என ஒரு உறுப்பினர் குறுக்கிட்டுக் கூறினர்.

"நாம் நீண்டகாலமாக வாழ்ந்து வந்துவிட்ட தேங்கிப் போன இந்தச் சமுதாயத்தைக் காட்டிலும் வேறு ஒரு ஒழுக்கக் கேடு இருக்க முடியாது. காலத்தோடு ஒட்டி நடப்பதிலிருந்து விலகிச் செல்வதிலும் வேறு ஒரு ஒழுங்கீனம் இருக்க முடியாது.

"இந்தியாவில் புகைவண்டி ஏற்பட்டதற்காகத் தாண்டன் அதிருப்தி கொள்ளுகிருர். புகைவண்டி வந்தது நன்மையோ தீமையோ, அது நிலைபெற்றுவிட்டது என்பது உண்மையாகும். அவரும் நானும், மற்றும் அனைவரும் ஆகாய விமானம் மூலம் பிரயாணம் செய்தாலன்றி, புகைவண்டியில்தான் பிரயாணம் செய்கிறேம்; அதற்கு நம்மைப் பழக்கிக் கொண்டோம். ஆனுல் சமுதாயம், சமூகக் கருத்தில், புகைவண்டிக்கு முற்பட்ட காலத்தில் செயல்பட விழைகிறேம்; அது முடியவே முடியாது.

"இளம் நங்கையரைக் குறித்து தாண்டன் அதிருப்தியாகப் பேசி இருக்கிருர் இளம் நங்கையரும், வாலிபர்களும், மூதாட்டிகளும், முதியவர்களும் செய்கின்ற சில செயல்களை நானும் ஒப்புவதில்லை. இருந்தாலும், இந்தியப் பெண்மையிடத்தில் எனக்குள்ள நன்மதிப்பை வெளிப்படையாகக் குறிப்பிடுகிறேன். இவ்வாறு குறிப்பிடுவது, நமது நினைப்பிற்கும், வணக்கத்திற்கும் உரிய அக்கால இந்தியப் பெண்களின் வரலாற்று ஆதாரங்களை மட்டுமே நான் குறிப்பிடவில்லை; நம்முடைய காலத்தில் இருந்து வரும் இக்காலப் பெண்மணிகளையே குறிப்பிடுகிறேன். இந்தியாவின் புதுமைப் பெண்மையானது, வளர்ந்துகொண்டு வருகிறது. எவ்வளவு குறைபாடுகளும், குற்றங்களும் கொண்டதாக அது இருந்தபோதிலும், அதை நான் மதிக்கிறேன். எத்தகைய பெரும் முன்னேற்றம் இந்தியாவிற்கு ஏற்படுவதாக இருந்தாலும்—முன்னேற்றம் ஏற்பட்டே தீரும்—அது பெரிதும் இந்தியப் பெண்கள் மூலமாகவே ஏற்படும் என்றே நான் நம்புகிறேன்.

"இந்தியப் பெண்களின் நிலை இன்று சீராக இல்லை. அது, அப்பெண்களின் தவறு அல்ல. நன்மை தரக்கூடிய காலவரையறையையும் தாண்டி, நெடுங்காலமாக உயிருடன் இருந்து வரும் சமுதாயக் கட்டுக்கோப்பின் தவறேயாகும்."

—இவ்வாறு, மக்கள் சபையில், இந்து வாரிசு உரிமை மசோதாவை சட்டமாக்க வேண்டுமென்ற பிரரேபணைமீது விவாதம் நடைபெறுகையில், இடையில் குறுக்கிட்டுப் பிரதமர் நேரு பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து அவர் சொன்னதாவது :—

"சிலருடைய மனப்போக்கு தவிர உலகில் மற்ற அனைத்தும் மாறி வருகின்றன. தங்களுடைய சிந்தனைக் கொப்ப உலகம் இல்லாததால், அதனிடத்து சிலர் சீற்றம் கொள்ளுகின்றனர். மாறிவரும் உலகத்தோடொப்ப நாம் செயல்படத் தவறும் பட்சத்தில், அதனுல் நஷ்டம் அடையப்போவது உலகமன்று; நாம்தான் அதனுல் பாதிக்கப்படுவோம்.

"பொருளாதார உரிமைதான் இந்தியப் பெண்களின் அடிப்படைத் தேவையாகும். இன்று, அவ்வுரிமை இந்தியப் பெண்களுக்கு இருக்கவில்லை பொருளாதார உரிமை வழங்கல் என்ற முறையில் இம்மசோதா இருக்கவில்லை. ஆனுல், அதற்கான வழியில் இது ஒரு முயற்சியாகும்.

"தங்களைப் பராமரித்துக்கொள்ளுவதற்காக எனது மகளோ மற்றவர்களோ என்னைத் தாங்கி நிற்கவேண்டும் என்பதில், எனக்குத் தனிப்பட்ட முறையில் எந்த வித விருப்பமுங்கிடையாது. அவள் தன் சுயபலத்தால் வாழவேண்டும் என்பதே என் ஆசை. இந்தியாவிலுள்ள ஒருவேனு, ஒருத்தியோ, சுயபலத்தால் நிற்க வேண்டியதற்கான ஆற்றலைப் பெறவேண்டுமென்பதையே நான் விரும்புகிறேன். பிறரைத் தாங்கி வாழவேண்டும் என்ற கருத்தை நான் விரும்பவில்லை. நான் தோழமையையே விழைகிறேன். இம்மசோதா அந்தத் துறையில் ஒரு முற்படியாகும். அவ்வகையில அதிகமாக இது சாதிக்கவில்லையானுலும், நமது சிந்தனு முறையிலும், நடத்தையிலும் பிடித்திருக்கிற துருப்பிலிருந்து நம்மை வெளியேற்றச் செய்திருக்கிறது.

"வேகமாக மாறிவருகின்ற உலகில், ஆயிரம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்பவர் போல் ஒருவர் தொடர்ந்து சிந்தித்து வருவது போன்ற, காலம் கடந்ததும் எனைத்தூர் குரியதுமான செயல் வேறு எதுவும் இருக்கமுடியாது."

மாநில மாநாடு அலுவல்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேரமின்றி ஓடிக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் தங்களுக்கு இறக்கைகள் இல்லையே என்று ஏங்குகின்றனர்.

மாநாட்டுக்கு வருவோருக்காக, தென்னிந்திய இரயில்வே நிலயத்தார் தனி வண்டிகள் விடுவதாகத் தெரிவித்துள்ளனர். நேற்று, தென்னிந்திய 'இரயில்வே டிராபிக் சூப்பிரண்டெண்ட்'டை வரவேற்புக்குழுத் தலைவர் அன்பில்-தர்மலிங்கம் சந்தித்துப் பேசினர்.

இம்மாதம் 15-ந்தேதி இரவிலிருந்து ஐந்து நாட்களுக்கு இரவு 10-30 மணிக்கும், 12-மணிக்கும் இரண்டு 'ஸ்பெஷல்' வண்டிகள் மதுரையிலிருந்து புறப்பட்டு திருச்சி வந்து சேரும். மாநாடு முடிந்திடும் நாளில் மேலும் தனி வண்டிகள் விடுவதாகவும் வாக்களித்துள்ளனர்.

இன்னும் வடக்கிலிருந்து விடப்படும் வண்டிகளின் விபரம் கிடைக்கவில்லை கிடைத்ததும் தெளிவாக, புறப்படும் இடம், நேரம் ஆகிய விபரங்களோடு 'நம்நாடு' இதழில் வெளியிடப்படும்.

பந்தல் இருக்கும் 'ரேஸ் கோர்ஸ்' மைதானத்திற்கு இப்பொழுதிலிருந்தே பஸ்கள் வந்து திரும்புகின்றன. புதுக்கோட்டை செல்லும் வெளியூர் பஸ்கள் கூட பாதை திருப்பப்பட்டு, இவ்வழியே செல்கின்றன. மாநாடு நடக்கும் நாட்களில் மேலும் அதிக பஸ் வசதிகள் செய்யப்படும்.

மாநாட்டு செயலாளரில் ஒருவரான மதுரை முத்து இன்றிலிருந்து திருச்சியிலிருந்து மாநாட்டு வேலைகளைக்கவனித்து வருகிருர்.

புரட்சி நடிகர் எம் ஜி இராமச்சந்திரன் இன்று காலை மாநாட்டுப் பந்தலுக்கு வந்திருந்து மாநாட்டு அலுவலாளர்களிடம் மாநாட்டு அலுவல்களைப் பற்றிப் பேசியிருந்துவிட்டு, அண்ணு, ஈ. வெ. கி. சம்பத் ஆகியவர்களோடும் மாநாடு சம்மந்தமாகவும், மாநாட்டில் நடத்தும் நாடக சம்மந்தமாகவும் பேசிவிட்டுச் சென்ருர்.

நற்பணிகள் எதிலும் தம் நாமம் இருக்கும்படி பணிபுரியும் நற்பண்பாளர்—நம் கழக ஆர்வலர்—நகர சபை உறுப்பினர் நாகசுந்தரம், மாநாடு வெற்றிபெற பெரும்பாடுபட்டு வருகிருர். நம் பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் அவர்களுக்கு திருச்சி நகரசபையில் வரவேற்பு கொடுப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் நம் நண்பர், கழக செயல்வீரர் நாகசுந்தரம் என்ருல், அது உண்மை—வெறும் புகழ்ச்சியில்லை.

மாநாட்டு அலுவலகத்தில் பராங்குசம், மணி, பரமசிவம் ஆகியோருடன், பழனி, செல்வராஜ், கிருஷ்ணமூர்த்தி முதலிய தோழர்களும் பணியாற்றுகின்றனர். பெயர் குறிப்பிட்டவர்கள் இவர்கள்; இன்னும் எண்ணற்றோர், 'எனக்கொரு வேலை தாருங்கள்; என்னுல் ஒரு வேலை ஆனதாக இருக்கட்டும்' என்று மாநாட்டு வெற்றிக்கு உழைக்கின்றனர்.

பொதுச் செயலாளரும், துணைப் பொதுச்செயலாளரும் சட்ட திட்ட திருத்தங்களை எழுதி முடித்துவிட்டார்கள்: நகல் அச்சாகிக் கொண்டிருக்கிறது; பொதுக்குழு உறுப்பினர்களுக்கு 13-ந் தேதி கிடைக்கும்

மாநாட்டு நிகழ்ச்சி விபரங்களில், 18-5-56 மாலை 3 மணிக்கு தேன்காசி முத்துசாமி அவர்களின் இன்னிசையையும், இரவு 9 மணியிலிருந்து 10-மணி வரை பொன்னு உடற்பயிற்சி கழகத்தினரின் உடற்பயிற்சிகளையும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

தலைமை நிலயத்தில் அண்ணு, நெடுஞ்செழியன், என். வி. நடராசன், ஈ. வெ. கி. சம்பத், போளூர்-சுப்பிரமணியம், சி. வி. இராசகோபால், கே. எம். கண்ணபிரான் ஆகியோர் இருந்து மாநாட்டு வேலைகளை துரிதப்படுத்துகிருர்கள்.

ஓவியக் கண்காட்சிக்காக உலக நாடுகளின் தலைவர்கள் படங்கள் எழுதப்பட்டு வருகின்றன. உலகைத் திருத்திய உத்தமர்களின் படங்கள் அவர்களின் பொன்மொழிகளோடு உருவாக்கப்படுகின்றன.

இம்மாதம் 13-ம்நாள், மாநாட்டைப் பற்றி விளம்பரம் செய்யும் நாளாக கொண்டாடும்படி தலைமை நிலய அறிக்கை கூறுகிறதல்லவா? அன்று மதுரையில் 1,000 சைக்கிள்கள் கொண்ட ஊர்வலம் நடைபெற இருக்கிறது என்று தகவல் கிடைத்துள்ளது. இதுபோல் எல்லா முக்கிய நகரங்களிலும் நடைபெறும்.

கழகத் தோழர்கள் இன்றிலிருந்து, தலைமைக் கழகத்திலிருந்து வந்துள்ள துண்டு வெளியீடுகளை வீடுதோறுஞ் சென்று, திருமண காலங்களில் பத்திரிக்கை வைத்து அழைப்பதுபோல, விபரங் கூறி அழைத்திட வேண்டும். 'எங்கள் ஊரிலிருந்து ஆயிரம் பேர் வந்தோம் — இரண்டாயிரம் பேர் வந்தோம், என்று கூறிக் களிக்கும்படி தோழர்களை அழைத்துக்கொண்டு வரவேண்டும்.

வருகிற தோழர்கள் அவசியம் தங்கள் வீட்டிலுள்ள தந்தை, தாயார், மனைவி, பிள்ளைகள் சகிதம் குடும்பம் குடும்பமாக வரவேண்டும். பகுத்தறிவாளர்களாகிய நாம், நம் வீட்டவரை வேறு எங்கே அனுப்புகிறேம்? கும்பாபிஷேகம் பார்க்கவா? மகாமகத்தில் குளிக்கவா? இல்லையே! இம்மாதிரி மாநாடுகளில் அவர்களெல்லாம் பங்கு பெற வேண்டும். பந்தலில் எணை கட்டி எதிர்கால செல்வங்கள் உறங்கும் காட்சி இருந்தால் அது மாநாட்டின் வெற்றியின் சின்னமாகும்.

வாடகை கொடுத்து தங்கக்கூடியவர்களுக்கும், மற்ற தோழர்களுக்கும் உதவும் வகையில் பலஇடங்களை வரவேற்புக்குழுவினர் ஏற்பாடு செய்துள்ளனர். அசோக் பவன், நியூமாடல் ஹோட்டல். இராமலிங்க பவன், மாயவரம் லாட்ஜ், பிரயாணிகள் பங்களா, முனிசிபல் சத்திரம், பழைய ஸ்பென்சர் கட்டிடம் இன்னும் பல இடங்களை, அமர்த்தியுள்ளனர்.

16—5—56 அன்று மாலை தி. மு. க. மாணவர் கிளையின் அமைப்புக்குழுக் கூட்டம் மாநாட்டுப் பந்தலில் நடைபெறும் என அமைப்பாளர் டி. கே. பொன்னுவேல் அறிவித்துள்ளார்.

16—5—56 அன்று காலை 7-30 மணிக்கு தி. மு. க. செயற்குழு தலைமை நிலயத்தில் கூடுகிறது. நிறைவேற்ற வேண்டிய தீர்மானங்களைப்பற்றி அண்ணு, பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன், சம்பத், மதியழகன், வரவேற்புத் தலைவர் அம்பில்-தர்மலிங்கம், செயலாளர்கள் மணி, முத்து, முதலானேர் பரிசீலனை செய்து வருகின்றனர்.

ஆகவே, தோழர்களே! இன்றே, திருச்சியை கவனத்தில்கொண்டு பணியாற்றுங்கள் — அணிஅணியாய் வாருங்கள் என அழைக்கின்றனர் வரவேற்புக்குழுத் தோழர்கள்.

வாரீர், தோழரே! வாழ்விழந்த திராவிடத்திற்கு வாழ்வளித்திட வந்து சேரீர் திருச்சிக்கு!

கழகக் கூட்டம்

★

சென்னை — குயப்பேட்டை :
(படவட்டம்மன் கோயில் வீதி, சென்னை-12)
12—5—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :
அ. பொ. அரசு, எம்.சி.

பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
இளம்பரிதி

குறிப்பு : தோழியர் கமலகுமாரி குழுவினர் இன்னிசை வழங்குவர்.

—24-வது வட்ட தி. மு. க. படிப்பகம்

★

மன்னார்குடி :
தேரடியில்
12-5-56 மாலை 6-30 மணிக்கு

பேசுவோர்:
க. அன்பழகன்
அறிவுடைநம்பி

குறிப்பு: மன்னார்குடி சுந்தரேசன் இன்னிசை வழங்குவார்.

சொற்பயிற்சிக் கூட்டம்

11—5—56 மாலை 6½ மணிக்கு, சென்னை-1, எண் 17, சாலைவிநாயகர்கோயில் தெரு முத்தமிழ் மன்றப் பணிமனையில், தோழர் ச. பாலன் தலைமையில் 'சமத்துவம்' எனும் பொருள் பற்றி மன்றத் தோழர்களும், மற்றும் பலரும் பேசுவர்.

அரக்கோணத்தில்

'நம் நாடு' விற்பனையாளர்

எஸ். ஷாஜகான், புக் டிப்போ, 5 கார்திரோடு, அரக்கோணம்.

உலகப் பெரிய...

(முதல் பக்கத் தொடர்ச்சி)

1,840 அடி நீளமும், 290 அடி உயரமும் கொண்ட 15 அணைகளும், 16 வளைவுகளும் உள்ளன என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இரண்டு ஆயிரம் கோடி கனஜெஜத் தண்ணீரைத் தேக்கிவைக்கவும், அதன்மூலம் பாசனம், போக்குவரத்து, மின்சார உற்பத்தி, வெள்ளத் தடுப்பு ஆகியவற்றிற்கு நீர்த் தேக்கம் பயன்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

கண்டிப்போர் தொகையும்..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வேலைதரும் சக்தியை அதிகரிக்கச் செய்யும் வகையில், நகரிலும், சுற்றுப்புறங்களிலுமாக ஏராளமான தொழிற்சாலைகள் தோன்ற வழிவகை செய்தாக வேண்டும்."

சென்னை சர்க்காரை நகரசபைக் கூட்டத்திற்கு அழைக்கவேண்டும் என்ற அனந்தராம கிருஷ்ண அய்யரின் யோசனையை சபைத் தலைவர் இராமநாத அய்யர் ஏற்றுக் கொண்டு, அந்த யோசனையை அமுல்செய்ய ஏற்பாடு செய்யும் பொருட்டு, சபைக்கூட்டத்தை பிறிதோர் நாளுக்கு ஒத்திவைத்தார்.

மத்திய சர்க்காருக்குச் சொந்தமான உணவுத் தானிய சேமிப்புக் கிடங்குகளில் மொத்தம் 2,10,000 டன் உணவுத் தானியங்களைச் சேமித்து வைப்பதற்கு இடவசதி உள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.